3 பாடம்

# சிறையிலிருந்து தப்புதல்

***ஜான், பீட்டர், மார்த்தா மூவரும் தங்கள் பெற்றோருடன் நற்செய்திக் கூட்டமொன்றின் மூலம் ஏழாம் நாள் அட்வென்ட்டிஸ்ட்டாக மாறி, யாவரும் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். ஆனால் ஓய்வுநாளன்றும் பள்ளிக்கு வருமாறு சட்டமிருந்தது. தேவனுக்கா? அரசாங்கத் துக்கா? யாருக்குக் கீழ்ப்படிவது? அப்போஸ் தலர்களுக்கும் இப்படி ஒரு சோதனை வந்த போது அவர்கள் என்னசெய்தனர் எனப் பார்ப்போமா?***

அப்போஸ்தலர்கள் தொடர்ந்து பிரசங்கம் செய் தார்கள். அற்புதங்கள் நடந்தன. இயேசுவின் நாமம் எங்கும் தொனித்தது. அது ஆசாரியர்களுக்கும், அதிகாரி களுக்கும் பிடிக்கவில்லை; எனவே, பொறாமை கொண்டு, அவர்களைச் சிறையில் அடைத்தார்கள்.

சிறைக்குள்ளேயே அப்போஸ்தலர்களை வைத்திருக்க வேண்டும். அப்படியானால், இயேசு உயிர்த்தெழுந்தார் என்று எவரும் பிரசங்கிக்கமாட் டார்கள்; மக்களும் இயேசுவை மறந்துவிடுவார்கள் என்று நினைத்துக்கொண்டார்கள். அவர்களில் சதுசேயர் என்போர், தூதர்கள் என்று எவரும் கிடையாது என்று சாதிப்பவர்களாயிருந்தனர்.

ஆனால் தேவனோ, அவர்களது சிந்தனையையும் செயல்களையும் கண்டு நகைத்திருக்கவேண்டும் அன்றைக்கு இரவிலேதானே, கர்த்தருடைய தூதன் சிறைச் சாலையின் கதவுகளைத் திறந்தான். அவர்களை வெளியே கொண்டுவந்தான். "நீங்கள் போய் தேவால யத்திலே நின்று இயேசுவைப் பற்றின ஜீவவார்த்தை கள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல் லுங்கள்" என்றான்.



அப்போஸ்தலர் களும் அவ்வாறே அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப்

## மனன வசனம்

**பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (என்றார்கள்). அப்போஸ்தலர் 5:29.**

போதகம் பண்ணினார்கள்.

பிரதான ஆசாரியனும், அவனுடன் இருந்தவர்களும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்களை வரவழைத்தனர். பின்னர் அப்போஸ்தலர்களை அழைத்துவருமாறு சேவகரை அங்கே சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். சேவகர் போய், சிறைச்சாலையில் அவர்களைக் காணாமல் திரும்பி வந்தனர். ஆனால், சிறைச்சாலையோ பூட்டிய படியே இருந்தது. கதவின் முன்னே மிடுக்கான தோற்றுத் துடன் விறைப்பாக வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

விபரத்தைச் சேவகர்கள் கூறியது கேட்டு அதிகாரிகளும் ஆசாரியர்களும் கலக்கமடைந்தார்கள். சிறைக் குள் இருந்தவர்கள் சிறைக் கதவுகள் திறக்கப்படாமல் தப்பியது எவ்வாறு? இதென்னமாய் முடியுமோ? எனக் கலங்கினார்கள்.

அப்போது ஒருவன் வந்தான். ‘‘இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று பிரசங் கம் செய்துகொண்டிருக் கிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான். அதைக் கேட்டு அதிகாரிகள் கோபத்துடன் தங்கள் பற்களை நறநறவென்று கடித்தார்கள்.

உடனே சேனைத் தலைவன் சேவகருடன் சென் றான்; ஜனங்கள் தங்கள்மேல் கல் எறியக்கூடும் எனப் பயந்தான். எனவே, அப்போஸ்தலர்களைப் பலவந்தப்படுத்தாமல் அழைத்து வந்தான். ஆலோ சனைச் சங்கத்துக்கு முன்பு அவர்களை நிறுத்தினார்கள். ஆலோசனைச்சங்கத்தின் முன்னே அதிகாரிகளும் பிரதானஆசாரியர் யாவரும் கூடியிருந்தனர்.



## செய்தி

**இயேசுவே மிகமுக்கியமானவர் என்பதை ஆலயத்தில் நாம் கற்றுக்கொள்கிறோம்.**

அப்போஸ்தலர்களைக் கண்டபோது, கோபம் பொங்கியது. எரித்து விடுவதுபோலப் பார்த்தார்கள்.

''இயேசுவின் நாமத்தைக் குறித்துப் போதிக்க வேண்டாமென நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டோமே! ஏன் நீங்கள் எங்களுக்குக் கீழ்ப்படியவில்லை?'' என்று பிரதான ஆசாரியன் கேட்டான்.

அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும், ''மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைக் காட்டிலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியமாயிருக்கிறது'' என்றார்கள்.

என் செல்லமே! உன் வாழ்வில் முதலிடம் யாருக்கு? இயேசுவுக்குத்தானே?.

**செய்முறை:**

*சிறைச்சாலையின் கதவுகள் எப்படித் திறந்தன என்பதைக் கண்டறிய கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளுடன் கூடிய பகுதிகளில் வண்ணமிடு.*




## புதிர் 3

